DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.பெருமாள்சாமி | Father/Husband Name : கிருஷ்ணசாமி |
| Age : 59 | Village : நாகபாளையம் |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17 Mar 2026 11:55

(A1 charge abated. A2 present, A3, A4 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

1. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தற்சமயம் ஞாபகத்தில் இருக்கிறதா என்றால் ஞாபகம் இருக்கிறது. நாங்கள் எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு புறப்பட்டோம் என்றால் காலை 8.00 மணிக்கு புறப்பட்டோம். யாரெல்லாம் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் நான், உதவி ஆய்வாளர் முத்துராஜ், தலைமை காவலர் நடராஜன் மற்றும் மருதுபாண்டி என்ற துரைமுருகன் ஆகியோர் சென்றோம். யாருடைய உத்தரவின் பெயரில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் எங்களை அழைத்து சென்றார். நாங்கள் எங்கே எல்லாம் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் தாயில்பட்டி வழியாக சென்று சேதுராமலிங்கபுரத்திற்கு சென்றோம்.

2. சேதுராமலிங்கபுரத்திற்கும் ஆற்றுக்கும் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். சேதுராமலிங்கபுரத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 12 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். எங்கள் காவல் நிலைய பொது நாட்குறிப்பேடு மற்றும் என்னுடைய பாக்கெட் டைரி ஆகியவற்றை பார்த்தால் நான் கூறுவது போல் ரோந்து பணிக்கு சென்றேனா என்பதும், வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்பதும் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு உதவி ஆய்வாளர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டதா அல்லது தயார் செய்யப்பட்ட அத்தாட்சியின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டதா என்றால் அத்தாட்சியின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாகும்.

3. அத்தாட்சியை எழுதியது யார் என்றால் உதவி ஆய்வாளர் ஆவார். அத்தாட்சியில் மண்வெட்டி இரும்பு கைப்பிடியை கொண்டதா அல்லது மர கைப்பிடியை கொண்டதா என்பது போன்ற முழுமையான விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் முழு விவரம் பதிவு செய்யப்படாததில் இருந்து நாங்கள் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்பதையும், நாங்கள் கூறுவது போல் அங்கு வைத்து எதிரிகளை பார்க்கவில்லை என்பதையும், பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதையும் காண்பிக்கிறது என்றால் சரியல்ல. அத்தாட்சியில் எதிரிகளிடம் கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை என்றால் அவர்கள் ஓடி விட்டதால் அவர்களிடம் கையொப்பம் வாங்கவில்லை.

4. என்னை உதவி ஆய்வாளர் முத்துராஜ் வழக்கு சம்பவ தேதியில் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்த போது

சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் இருந்ததாக கூறினேன் என்றால் நான்கு நபர்கள் இருந்ததாக கூறினேன். நாங்கள் நான்கு பேரும் ரோந்து பணிக்கு காவல் நிலையத்தில் இருந்து தான் ஒன்றாக தான் புறப்பட்டு சென்றோம் என்றால் சரிதான். சம்பவ இடமாக கூறப்படும் சேதுராமலிங்கபுரம் ஆற்று பகுதிக்கும் நாங்கள் நான்கு பேரும் ஒன்றாக தான் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் நான்கு பேரும் ஒன்றாக நின்று தான் சம்பவ இடத்தில் சம்பவத்தை பார்த்தோம் என்றால் சரிதான்.

5. நான் அத்தாட்சியில் உதவி ஆய்வாளரின் வேண்டுகோளின் படி காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும், நான் கூறுவது போல் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ள தளவாடப் பொருட்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், அவை சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

6. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படங்கள் சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்பட்டவை அல்ல என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து புகைப்படம் எடுக்கப்படவில்லை என்பதிலிருந்து அந்த வாகனம் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்பதை காண்பிக்கிறது என்றாலும், காவல் நிலையத்தில் இருந்த மணலை நாங்கள் நீதிமன்றத்தில் காண்பித்துள்ளோம் என்றாலும் சரியல்ல. மணலில் மதிப்பை கூறக்கூடிய வகையில் நான் தனியாக படிப்பு எதுவும் படிக்கவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டபடி நான் முதல் விசாரணையில் அதை கூறி உள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. 17 Mar 2026 12:13

Judicial Magistrate 2, Sattur.